# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.187/2019

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 05–02–2026.

பெயர் = நெடுஞ்செழியன்

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2 ம்பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –

(1) 31.05.2019 ம் தேதிக்கு முன்பு வரை 1,2 பிரதிவாதிகள் தரப்பில் நிர்வாகம் சரியாகத்தான் இருந்தது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளை தேர்தல் சம்பந்தமாக எத்தனை முறை நேரடியாக அணுகியிருப்பேன் என்றால் 4,5 முறை அணுகினேன் என சாட்சி கூறுகிறார். அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்றால் சரியான பதில் சொல்லவில்லை என சாட்சி கூறுகிறார். நான் எழுத்துமூலமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக 1,2 பிரதிவாதிகளுக்கு தேர்தலை முறையாக நடத்தவேண்டுமென அறிவிப்பு கொடுத்தேனா என்றால் வழக்கறிஞர் மூலம் கொடுத்தேன் என சாட்சி கூறுகிறார். நான் கொடுத்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5,6 நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்புகள் என்றால் சரிதான். என்னிடம் வா.சா.ஆ.8,9 ஆகியவை 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்புகள் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் என்னுடைய அறிவிப்பில் உள்ள விசயங்களை மறுத்துள்ளனர் என்றால் சரிதான். அறிவிப்பு அனுப்பிய பிறகு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிராதில் சொல்லியவாறு வாக்காளர் பட்டியலை தயார் செய்ய 1,2 பிரதிவாதிகள் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் சங்கங்களுக்கு தனித்தனியாக விதிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த விதிகளின்படிதான் சங்கத்தில் உறுப்பினர் சேர்க்கை செய்ய முடியும் என்றால் சரிதான்.

(2) 1,2 ம் பிரதிவாதிகள் சங்கத்தில் உறுப்பினராவதற்கு என்ன தகுதி என்றால் ஜவுளிவியாபாரம், சாயத்தொழில், நூல் தொழில், ஜவுளி உற்பத்தி சம்பந்தப்பட்ட அனைத்து தொழில்கள் சம்பந்தப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை செய்கிற நிறுவனங்களை நடத்துகிற நபர்கள் மட்டுமே உறுப்பினராக ஆக முடியும். அது சம்பந்தப்பட்ட துணைவிதி 3 என்றால்

சரிதான். 3ம் பிரதிவாதியை எதற்காக வழக்கில் சேர்த்தோம் என்றால் கூட்டம் நடைபெறும்போது கருத்துவேறுபாடு ஏற்பட்டு சத்தம்போட்டதால் 1,2ம் பிரதிவாதிகள் சொல்லி 3ம் பிரதிவாதி கூட்டத்திற்கு வந்து பேசக்கூடாது என சொல்லி கூட்டத்தை முடித்துவிட்டுதான் செல்லவேண்டும் என சொன்னதால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். 4ம் பிரதிவாதியை எதற்காக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தோம் என்றால் கூட்டம் நடக்காமல் முறையான உறுப்பினர்கள் இல்லாமல் மற்றவர்களிடம் கையெழுத்து பெற்று பதிவு செய்யச்சென்றதால் பதிவு செய்யக்கூடாது என்பதற்காக அவரை சேர்த்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். 5ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில்தான் நானும், 2ம் வாதியும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு 1,2 பிரதிவாதிகள் முறையான வாக்காளர் பட்டியலை தயார் செய்ய ஒப்புக்கொண்ட பிறகு 5ம் பிரதிவாதியை வழக்கை இழுத்தடிக்க வேண்டி தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், 2ம் வாதியும் மேற்படி சங்கத்தில் உறுப்பினர்கள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். 1,2 பிரதிவாதிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை நாங்கள் சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளும், நிர்வாகத்தினரும் விதிப்படி முறையான வாக்காளர்பட்டியலை தயார் செய்ய தயாராக இருந்தார்கள் என்றாலும், நாங்கள் அதற்கு ஒத்துழைக்காமல் வேண்டுமென்றே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.05 14:13:46 +0530